முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி இன்னொரு பள்ளியை நாங்கள் அங்கே திறந்து வைத்திருக்கிறோம். இப்போது மின்னலிலும், மிட்டப்பேட்டையிலும் தரம் உயர்த்தவேண்டுமென்று சொல்கிறார்கள். அவருடைய கோரிக்கை மின்னல்போல் மறைந்துவிடாமல் நிச்சயமாக அரசு அதைக் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

38—

கருங்கல் சுவர்

***71764—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, ஜவளகிரி சரகத்தில் பேலகரை வனப் பகுதியில் யானைகள் கிராமப்புறங்களுக்கு வராமல் தடுக்க கருங்கல் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

தளி தொகுதியிலுள்ள பேலகரை கிராமத்தின் அருகில் யானைகள் செல்லும் வழித்தடத்தில் குறுக்கே கருங்கல் சுவர் அமைக்க வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன். இருக்கையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2009 ஜூன் 26]

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருக்குப் பதிலாக நான் துணைக் கேள்வி கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலாக கேள்வி கேட்பதாக இருந்தால், அதை அப்பொழுதே சொல்லியிருக்கவேண்டும்.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைகளில் மிருகங்கள் இருக்க வேண்டியது அவசியம். அப்போதுதான் மலைக்கு அழகு. ஆனால் மலைப் பகுதியை ஒட்டிய கிராம மக்களும், விவசாய நிலங்களும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம். எனவே, நமது அரசின் சார்பில் இப்போது மின் வேலிகள் அமைக்கப்படுகின்றன. மின் வேலிகள் அமைக்கப்படும்போது பேட்டரிகள் அடிக்கடி பழுதாகிவிடுகின்றன. அந்த பேட்டரிகளைப் பழுதுநீக்கம் செய்ய வேண்டிய பொறுப்பு அந்தந்தப் பகுதி விவசாயிகளுக்குத்தான் என்று வனத் துறையினர் சொல்கிறார்கள். எனவே அமைக்கப்பட்டிருக்கின்ற மின் வேலிகளால் விவசாயிகளுக்கும் அந்தப் பகுதியினுடைய கிராமப்புற மக்களுக்கும் பயனில்லாமல் போய்விடுகிறது. எனவேதான், கருங்கல்லில் சுவர் அமைத்து மிருகங்கள் கீழே இறங்குவது தடுக்கப்படுமா என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

பொதுவாக, மலைகளில் ஆடு, மாடுகள் மேயச்சென்றால் மிருகங்கள் கீழே இறங்குவது தடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இப்போது வனச்சரகம் என்று சொல்லி, சரணாலயங்களாக பெரும்பகுதி மலைகளை மாற்றியதன் காரணமாக, ஆடு, மாடுகள் மலைக்குச் செல்ல முடியவில்லை. எனவே, ஆடு, மாடுகள் செல்வது நிறுத்தப்படுகிறது; மக்கள் நடமாட்டம் நிறுத்தப்படுகிறது; அதன் காரணமாகவே, மலைகளில் இருக்கின்ற மிருகங்களெல்லாம் கீழே இறங்கிவிடுகின்றன. எங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதிகளில் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, மம்சாபுரம் போன்ற பகுதிகளில் மிருகங்களுடைய தாக்குதலுக்கு இரண்டு பேர் சென்ற ஆண்டு இறந்துவிட்டார்கள். அரசின் சார்பில் 25,000 ரூபாய் அவர்களின் குடும்பத்திற்கு நிவாரண நிதி வழங்கப்பட்டது. அது போதுமானதாக இல்லை.

எனவே, மிருகங்கள் கீழே இறங்குவதைத் தடுப்பதற்கு ஒரு நல்ல யோசனையை அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கின்றோம். அது சுவர் கட்டினாலும் சரி, அல்லது இன்னும் தரமான மின்வேலி அமைத்தாலும் சரி, அல்லது மலையடிவாரப் பகுதிகளில் அகழிகளை வெட்டித் தடுத்தாலும் சரி, அல்லது ஆடு, மாடுகளை மலைகளில்

மேய அனுமதித்து அதன்காரணமாக மிருகங்கள் கீழே இறங்குவதைத் தடுத்து, ஏதாவது ஒரு வகையில் விவசாயிகளையும் அந்த மலையடிவார கிராமப் பொது மக்களையும் பாதுகாக்க வேண்டுமென்று தங்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், இதைப்போல வன உயிரினங்கள் மலைப் பகுதிகளிலிருந்து வெளியே வருவதைத் தடுப்பதற்காக மின் வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் பல இடங்களிலே அவற்றினுடைய மின்கலம் வேலைசெய்யாத காரணத்தால் செயல்படவில்லை என்று. ஏதோ ஒரு சில இடங்களில் நடந்திருக்கலாம். ஆனால், வனக் குழுக்களை வைத்து அவற்றைச் சரி செய்து, சரியாகப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு நாங்கள் அறிவுறுத்தியிருக்கின்றோம். ஏதாவது ஒரு சில இடங்களில் இருந்தாலும் எங்கள் வன அலுவலர்கள் உடனடியாக அதைச் சரிசெய்துவிடுகின்றார்கள். அவர்கள் ஆட்சியில் கடந்த ஐந்தாண்டு காலத்தில் 62.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு கோடி ரூபாய் செலவிலே சூரிய மின் வேலி ஏற்படுத்தியிருந்தார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 2006-2007-லே 262.5 கிலோ மீட்டர் 4,20,00,000 ரூபாய் செலவிலேயும், அதேபோன்று 2007-2008-லே 315.75 கிலோ மீட்டர் 5,05,20,000 ரூபாய் செலவிலும், இந்த ஆண்டு 2008-2009-லே 331.25 கிலோ மீட்டர் 5,30,00,000 ரூபாய் செலவிலும், இந்த அரசு மட்டும் 909.5 கிலோ மீட்டர் 14,55,20,000 ரூபாய் 1 கிலோ மீட்டருக்கு ரூ. 1.60 இலட்சம் என்ற மதிப்பீட்டில் அமைந்துள்ளது.*

முற்பகல் 10-15

இதிலே மட்டும் 841.5 கிலோ மீட்டர் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளிலே புலி, சிறுத்தைகள், யானைகள் இருக்கின்ற அந்தப் பகுதிகளிலே மக்களுக்கு அவை தொந்தரவு கொடுக்காமலிருப்பதற்காக மின் வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. மற்ற பகுதிகளிலெல்லாம் ஒரு 61 கிலோ மீட்டர் அமைக்கப்பட்டிருக்கிறது. 25 ஆயிரம் ரூபாய்தான் அந்த உயிரிழப்பிற்குத் தரப்பட்டிருக்கிறதென்று அவர் சொல்லும்போது

2009 ஜூன் 26]

சொன்னார். இல்லை, முதல் தவணையாக மட்டும் அன்றே 25 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதன் பின்னால் 75 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே 2006-2007-லே 85 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் நாங்கள் வழங்கியிருக்கிறோம். 2007-2008-லே நாங்கள் 71 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறோம். இந்த ஆண்டு ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறோம். அவர்களுடைய 5 ஆண்டு கால ஆட்சியிலே 1 கோடியே 25 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் வழங்கியிருந்தார்கள். இந்த ஆட்சியிலே மட்டும் இந்த 3 ஆண்டு காலத்திலே 2 கோடியே 72 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறோம்.

முன்பெல்லாம் யானை, புலி இதுபோன்ற மிருகங்கள் தாக்கி, அதனால் சேதமடைந்தால் மட்டும்தான் அவர்களுக்கு நஷ்டயீடு வழங்கப்பட்டது. ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக பொறுப்பேற்றதற்குப் பிறகு, காட்டுப் பன்றிகள், காட்டு மாடுகள் அல்லது மான்கள் இவை போன்ற வன உயிரினங்களால் சேதங்கள் விளைந்தாலும் அதற்கும் நஷ்டயீடு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியிலே இருக்கின்ற அந்த மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி நீண்ட நெடிய மலைப் பகுதி. அது புராதன சரணாலயப் பகுதி. அந்தப் பகுதிகளில் மிருகங்கள் கீழே இறங்காமல் இருக்க இன்னும் கொஞ்சம் கூடுதலாக மின் வேலி அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள், இந்த ஆண்டு 340 கிலோ மீட்டர் சூரிய மின் வேலி அமைப்பதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள்.

நிச்சயமாக அவர் கேட்கின்ற அந்தப் பகுதியிலே அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியாக இருக்கிறது, நீங்கள் சரணாலயம் வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஆனால் சரணாலயம் வந்தால் பல இடங்களிலே அங்கே பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். எந்தப் பணி மேற்கொள்ளப்பட வேண்டுமென்றாலும் நாங்கள் தேசிய வன உயிரின ஆணையத்திடம் அனுமதி பெற வேண்டும். உச்ச நீதிமன்றத்தின் அனுமதி பெற வேண்டும். எனவேதான் 25 விழுக்காடு வன உயிரினப் பகுதிகள், சரணாலயப் பகுதிகள் இருக்க வேண்டுமென்றாலும்கூட, இப்போது 18.23 விழுக்காடுதான் வன உயிரினப் பகுதிகள், சரணாலயப் பகுதிகள் இருக்கின்றன. இது போதும் என்றே நாங்கள் கருதுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைச் சொல்கிறபோது, மின் வேலிகள் அமைத்து பாதுகாப்பைத் தருகிறோம் என்று சொன்னார்கள். யானைகளைக் காட்டிலும் பன்றிகளின் தொல்லைதான் அதிகமாக இருக்கிறது. விவசாயிகள் நிலங்களில் பயிர் செய்கின்றபோது நூற்றுக்கணக்கான பன்றிகள் வந்து பயிர்களைச் சேதப்படுத்துவது வாடிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. நீங்கள் மின் வேலிகளை அமைக்கிறபோது யானைகள் எப்படி வருகிறது என்று சொன்னால், மின் வேலிகளின் அருகிலே வந்து மரக் கட்டையை எடுத்து அடித்து அந்த மின் வேலிக் கம்பிகளை உடைத்து, யானைகள் அவற்றைத் தாண்டி வருவதும் அரசுக்குத் தெரியுமா? எனவே அந்தப் பகுதிகளில் ஆழமான குழிகளை வெட்டி யானைகள் தாண்டி வராமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்பதை உங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகழிகள் வெட்டும்பொழுது அந்த அகழிகள் காலப் போக்கிலே தூர்ந்துவிடுகின்றன என்ற காரணத்தினாலேதான், புதிதாக சூரிய மின் வேலிகள் அங்கே அமைக்க வேண்டுமென்ற அந்தப் பணி மேற்கொள்ளப்பட இருக்கிறது. அவர் குறிப்பிடுவது போன்று கோவை மாவட்டத்திலே ஓரிரண்டு இடங்களிலே, அந்தப் பகுதிகளிலே,

2009 ஜூன் 26]

சம்பவங்கள் நடந்திருக்கின்றன. யானை பொதுவாக கொஞ்சம் நுண்ணறிவுள்ள ஒரு வன உயிரினம். கொஞ்சம் sensitive-ஆனதும்கூட. எனவேதான் அது சில இடங்களிலே, காய்ந்த மரங்களை எடுத்துப் போட்டுவிட்டு வந்துவிடுகிறது. அதற்காக இப்பொழுது அதுபோன்ற இடங்களில், அவை தாண்டி வராமல் இருப்பதற்கு, தகுந்த முறையில் ஒரு சிறிய அகழியை இதற்கு support-ஆக நாங்கள் ஏற்படுத்தி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.*

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சூரிய மின் வேலியைப் பற்றி ஒரு விளக்கமான பதிலைத் தந்திருக்கிறார்கள். என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே ஏறக்குறைய 38 கிலோ மீட்டர் தூரம் சூரிய மின் வேலி அமைக்கப்பட்டு மிக வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவதாக விவசாயப் பெருங்குடி மக்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் சில இடங்களில் அந்தச் சூரிய மின் வேலி அமைக்கப்பட்ட இடங்களின்கீழே பள்ளங்கள் இருந்தால் யானைகளும், வன விலங்குகளும் மிகவும் புத்திசாலித்தனமாக அந்த மின் வேலி இல்லாத பள்ளங்களுக்குள்ளே கீழே நுழைந்து வந்துவிடுவதாகச் சொல்கிறார்கள். அதற்காக நான் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து விசாரித்தபொழுது, அந்தப் பள்ளங்கள் இருக்கின்ற இடத்திலே* drops *போடலாம் என்று சொல்கிறார்கள். அந்த வேலிக் கம்பிகளையே கீழே* drops *மாதிரி போட்டால் அந்த யானைகள் உள்ளே நுழையாது என்று சொல்கிறார்கள். அதைப்போன்று ஆலோசனை வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.*

முற்பகல் 10-20

சமீப காலமாக, காட்டு விலங்குகள் குறிப்பாக யானைகள், குடியிருப்புப் பகுதிகளுக்குள் அடிக்கடி வருகின்ற செய்தி முன்பெல்லாம் எப்போதாவது நடக்கக்கூடிய சம்பவங்கள், இப்போது வாடிக்கையாகிப் போகின்றதைப்போல தெரிகிறது. அதற்கு என்ன காரணம் என்று ஒரு அறிஞர் எழுதுகின்றபோது, இந்த வனத் துறையினுடைய வன விலங்குகளைப் பற்றி ஆராய்ச்சி செய்கின்ற

அறிஞர்கள் எழுதுகின்றபோது, "வன விலங்குகள், அதிலும் குறிப்பாக யானைகள், ஒவ்வோர் ஆண்டும் பருவ காலத்திற்கு ஏற்ப, தங்களுடைய இனப் பெருக்கம், இரை தேடுதல், குடிநீர் தேவைகளுக்காக ஒரு பகுதியைவிட்டு இன்னோர் பகுதிக்குப் போகின்றபோது அதைத்தான் நாம் Elephant pass என்று சொல்வோம். அல்லது யானைக் கடவு என்று சொல்வோம். ஆனால் சமீப காலங்களிலே அந்த யானைகள் செல்கின்ற பகுதியிலே resorts என்ற பெயரிலே சில சுற்றுலாத் தலங்கள் அமைப்பதால் அது அந்த வன விலங்குகளுக்கு தங்கள் பருவ கால மாற்றங்களுக்கான பாதைகளில் குழப்பம் ஏற்படுகின்ற காரணத்தால், இதைப்போல நகர்ப்புறங்களுக்கும், குடியிருப்புப் பகுதிகளுக்கும் வந்துவிடுகின்றன" என்று அறிஞர்கள் எழுதுகிறார்களே, இதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அந்த resort போன்ற சுற்றுலாத் தலங்களுக்கு அனுமதி கொடுப்பதைத் தடுப்பதற்கு அரசு என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அந்த resorts-ம் குடியிருப்புதான். Resort போட்டதாலே குடியிருப்புகளுக்கு வருகிறது என்கிறீர்கள். அந்த resorts-ஏ குடியிருப்புதான். ஆகையினாலே modern ஆக அங்கேயே தங்கிவிடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல சில இடங்களிலே காட்டுப் பன்றிகள் உள்ளே வருகின்றன. அது ஒரு அடி. இந்த முதல் கம்பி 40 செ.மீ. உயரத்திலே போடப்படுகிறது. அதுபோன்ற பகுதிகளிலே கீழே மேலும் ஒரு கம்பி போட்டால் வர முடியாது என்கின்ற காரணத்தால் அதைப் போடுவதற்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அவர் யானைகள் குடியிருப்புப் பகுதிகளில் வருவதைப் பற்றிச் சொன்னார்கள். யானைகள் வழித் தடங்கள் என்று தமிழ்நாட்டிலே 12 இடங்கள் இருக்கின்றன. அவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தலித் காப்புக் காட்டில் ஒரு பகுதியும், அதைப்போல சத்தியமங்கலத்திலே தலைமலையில் இருந்து சாம்ராஜ் நகர் என்கின்ற பகுதியும், தலைமலையில் இருந்து புத்தியாத்தலூர், அதைப்போல நீலகிரி மலையிலே சிகூரில் இருந்து அவகரகல்லா, அதைப்போலவே

2009 ஜூன் 26]

மோயார்-சிங்காரா, அதைப்போல மோயார்-கல்கட்டி, அதைப்போல ஜக்கனாரி, கல்லாறு, போளம்பட்டி, அட்டகட்டி, ஆனைமலையில் பார்த்தால் கூனாச்சி என்ற இடம். அதைபோல எஸ்டேட் பகுதியிலே ஒன்று. நம்முடைய சிலுவை மேடு காடம்பாறை பகுதிகளிலே யானை வழித் தடங்கள் 12 இடங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் கண்டறிந்து மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் 2006-2007-லேயே அந்த நிலங்களைக் கையகப்படுத்தவேண்டும் என்பதற்காக 394 ஏக்கர் கையகப்படுத்துவதற்கு, ரூ.2 கோடியே 68 இலட்சம் ஒதுக்கித் தந்தார்கள். அதன் பின்னாலே நிலம் கையகப்படுத்த வேண்டும் என்றால் எவ்வளவு காலதாமதம் ஆகும் என்று தெரியும். இப்போது 62 ஏக்கருக்கு மட்டும், கல்லாறு-ஜக்கனாரி பகுதிக்கு மட்டும் ரூ.3 கோடியே 25 இலட்சம் என்று மதிப்பீடு தந்திருக்கிறார்கள். அதற்காக நிதியும் ஒதுக்கித் தந்துவிட்டார்கள். இந்த ஆண்டு 62 ஏக்கர் அரசுக்குத் தருவதற்கு அந்த நிலத்தினுடைய உரிமையாளரும் ஒத்துக்கொண்டிருக்கிறார். எனவே அது இந்த ஆண்டு கையகப்படுத்தப்படும். படிப்படியாக அந்த சிங்காரா பகுதியில் உள்ள 6 வழித் தடங்களும், 394 ஏக்கரும் விரைவிலே கைய்ப்படுத்தப்படும். இதைப்போல, யானைகள் செல்வதற்கு அந்த வழித்தடங்களில் நாம் தடை இல்லாமல் செய்து விட்டால், யானைகள் சிதறி வெளியே வராது.

நீங்கள் சொன்னீர்கள். அவையெல்லாம் உணவுத் தேவைக்காக வெளியே வருகின்றன என்று. ஒரு யானைக்கு, ஒரு நாளைக்கு 150 முதல் 250 கிலோ வரை உணவு தேவை. அதைப்போல தண்ணீர் 100 லிட்டர் முதல் 150 லிட்டர் வரை தேவை. யானைகள் கூட்டமாக இருக்கும். தாயினுடைய கண்காணிப்பில் இருக்கும். எனவே, அந்த யானைகள் இடம் பெயர்கின்ற நேரத்திலே தாய் அழைத்துச் செல்கின்ற இடத்திற்கெல்லாம் குட்டிகள் போகின்றன. அந்தமாதிரி வறட்சியான காலங்களில்தான் வெளியே வருகின்றன. எனவே, அந்தத் தண்ணீர்த் தேவையைப் போக்கிடத் தண்ணீர்த் தொட்டிகள் அமைத்திருக்கிறோம். பல இடங்களிலே கசிவுநீர்க் குட்டைகள் அமைத்து, தடுப்பணைகள் கட்டி, தண்ணீர்த் தேவையைப் போக்கிட ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.